# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : STC.15/2024 | Date: 14.08.2025 |
| Deposition of Witness for | : பு.சா.1 | |
| Name | : **நகுலன்** | |

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணை** :-

1) நான் டெக்ஸ்டைல் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் டிப்ளமோ படித்துள்ளேன். எதிரி ரிக் வண்டி வைத்து தொழில் செய்து வருகிறார். எதிரியை எனது அக்காவின் கணவர் மூலமாக சுமார் 15 வருடங்களாக தெரியும். எனது அக்கா கணவர் பரமத்தி வேலூரை சேர்ந்தவர். எதிரியை எனது அக்காவின் கணவர் மூலமாக தான் தெரியும் என்று நான் எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2) எதிரியின் வீட்டிற்கு நான் சுமார் 4-5 முறை சென்றுள்ளேன். கடைசியாக 2022 ம் வருடம் சென்றிருந்தேன். எதிரியின் குடும்ப உறுப்பினர்களை பற்றி தெரியுமா என்றால் எதிரியின் மனைவியை தெரியும், குழந்தைகள் இல்லை. வேறு யாரும் எதிரியுடன் உள்ளார்களா என்றால் அவரது அம்மா உள்ளார். எதிரியின் மொபைல் எண் தெரியுமா என்றால் தற்போது அவர் நெம்பரை மாற்றி விட்டார், அதனால் தெரியாது. எதிரி வைத்திருந்த பழைய போன் நெம்பர் தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை.

3) எதிரியை எனக்கு 15 வருடங்களாக தெரியும் என்று சொல்லியுள்ளதால் அப்படி இருந்திருந்தால் அவரது நெம்பர் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், அவ்வாறு இல்லாததால் தான் எதிரியின் நெம்பர் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான்

சம்பளத்திற்க்கு டெக்ஸ்டைல் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். எனது மாத வருமானம் என்ன என்றால் ரூ.40,000/-ம் ஆகும். எனக்கு இந்த வருமானத்தை தவிர வேறு வருமானம் உள்ளதா என்றால் விவசாயம், தறி உள்ளது. எனக்கு விவசாயம், தறி மூலம் வருமானம் வருகிறது என்பதை காண்பிப்பதற்காக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) எனக்கு எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றாலும், அவ்வாறு இருந்திருந்தால் எனது வருமானத்திற்கு ஆதரவாக ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்ததை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு ரூ.4,00,000/-ம் கடன் கொடுத்திருந்தால் ஒப்பந்த பத்திரங்கள் எழுதி வாங்கியிருப்பேன் என்றும், காசோலையை பெற்றிருக்க மாட்டேன் என்று சொன்னால் அவர் கைமாற்று கடனாக தான் என்னிடம் கேட்டார். நான் வட்டி எதுவும் எதிரியிடம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

5) பொதுவாக, ஒருவருக்கு கடன் கொடுத்தால் அவர் திரும்ப செலுத்துவாரா என்பதை தெரிந்து தான் கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எதிரி ஒரு சொந்த வீடு மற்றும் 03 ரிக் வண்டி வைத்திருந்தார் அதன் அடிப்படையில் கடன் கொடுத்தேன். எதிரியின் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 60 கி.மீ தூரம் என்றால் சரிதான், ஆனால் முன்பு நான் எதிரியின் ஊரான பரமத்தி வேலூரில் வசித்தேன். எதிரியின் முகவரி தெரியுமா என்றால் தெரியும், 3/115, உத்திக்காபாளையம், கோதூர் அஞ்சல், பரமத்தி வேலூர்.

6) எதிரிக்கு கடன் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் திருச்செங்கோட்டில் உள்ள டீ கடையில் வைத்து கொடுத்தேன். அப்போது யார் யார் உடன் இருந்தது என்றால் நானும், அவரும் மட்டும் தான் இருந்தோம். எனது வீட்டிற்கு எதிரி வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். கடைசியாக எதிரி எனது வீட்டிற்கு எப்போது வந்தார் என்றால் கடன் வாங்குவதற்கு முன்பு வந்தார். எதிரி எந்த பெயரில் ரிக் வண்டி வைத்து தொழில் செய்கிறார் என்றால் பெயர் தெரியாது.

7) கடந்த 11-05-2023 ம் தேதியிட்ட காசோலையை 38 நாட்கள் காலதாமதமாக வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு என்ன காரணம் என்றால் எதிரி பணம் கொடுப்பதாக கூறியதால் தாமதமாக வசூலுக்கு தாக்கல் செய்தேன். மேற்சொன்ன, சங்கதியை நான் புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையில் உள்ள நிரப்பிய விவரங்களும், தொகை மற்றும் கையொப்பம் வெவ்வேறு மையினால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8) பரமத்தி வேலூரில் உள்ள விஜேந்திரன் எனது நணபர் என்றால் இல்லை. பரமத்தி வேலூரில் விஜேந்திரன் என்ற எனது நண்பர் உள்ளார் என்றும், அவர் ஜெயகிருஷ்ணா போர்வெல் என்ற பெயரில் ரிக் வண்டி தொழில் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி, விஜேந்திரனிடம் கடந்த 2018 ம் வருடம் தொழில் தேவைக்காக ரூ.5,00,000/-ம் கடன் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி, கடனுக்கு செக்யூரிட்டிக்காக எதிரியிடம் இருந்து 02 காசோலைகளும், எதிரியின் மனைவியின் 02 காசோலைகளையும் பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) விஜேந்திரனிடம் பெற்ற கடன் தொகைக்காக கடந்த 2020 ம் வருடம் வரை எதிரி வட்டி செலுத்தி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கும்,

விஜேந்திரனுக்கு பஞ்சாயத்து தலைவர் மூலமாக பஞ்சாயத்து பேசி ரூ.5,00,000/-ம் தொகை தருவதாக பேசி முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன, ரூ.5,00,000/-ல் ரூ.4,50,000/-ம் தொகையை கடந்த 2023 ம் வருடம் மத்திய பிரதேசத்தில் உள்ள எதிரியின் டீலரிடம் விஜேந்திரன் பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீதி உள்ள ரூ.50,000/-ம் தொகையை கடந்த 2023 ம் வருடம் மார்ச் மாதம் விஜேந்திரன் எதிரியிடம் கையில் பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) விஜேந்திரன் தொகையை பெற்றுக்கொண்டு இரண்டு நாட்களில் பிணைய காசோலைகளை கொடுப்பதாக கூறிவிட்டு எனது மூலமாக இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்ய வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னை யார் என்றே எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது நண்பர் கந்தசாமி மூலமாக எதிரியின் மனைவியின் காசோலையை வைத்து கரூர் நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11) இந்த வழக்கு காசோலை எந்தவிதமான சட்டப்படியான கடனுக்காக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் வாங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பு கடன் கேட்டார். எனது வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபோது எதிரி என்னை அணுகி கேட்டபோது நான் விஜேந்திரன் சொல்லி தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளதால் தான் எதிரி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Nakulan